DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.266/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சாந்தி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | கார்த்திகேயன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் கே.புதுப்பட்டியில் குடியிருந்து சத்துணவு கூடத்தில் சமையலராக வேலை செய்து வருகிறேன். அ.சா 1 எனது கணவர். விபத்தில் இறந்து போன நாகம்மாள் எனது பெரியம்மா முறையாகும். ஆஜர் எதிரி எனக்குத் தெரியும். 23.03.2022 ம் தேதி இரவு 01.00 மணிக்கு நானும் எனது கணவரும் எனது பெரியம்மான நாகம்மாள் வீட்டில் இருந்தோம். எனது அத்தை வீடு மகாதானபுரத்தில் கரூர்–திருச்சி பைபாஸ் ரோட்டில் பொன்னராசி டவர் அருகே உள்ளது. இரவு 01.00 மணியளவில் எனது பெரியம்மா பாத்ரூம் செல்வதற்காக கரூர் திருச்சி ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சிறுநீர் கழிப்பதற்காக ரோட்டை கடந்த போது அரசு பேருந்து TN 45 3720 என்ற எண்ணுள்ள பேருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த பேருந்து எனது பெரியம்மா மீது மோதிவிட்டது.

2. எனது பெரியம்மாவிற்கு வலது பக்க தலையில் காயம் ஏற்பட்டது. கரூா அரசு மருத்துமனைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்பு மேல்சிகிச்சைக்காக பெரியம்மாவை திருச்சி GH க்கு கூட்டிச்சொன்றோம். மருத்துவர் எனது பெரியம்மா இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்துக்கு யார் காரணம் என்ன காரணம் என்றால் ஆஜர்

எதிரி தான் காரணம் அஜாக்கிரதையாக வண்டியை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியது தான் காரணம்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. விபத்து இறந்து போனவர் எனது பெரியம்மா ஆவார். நான் கே.புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். பொன்னரசி டவர் ரோட்டின் வடபுறம் உள்ளது என்றால் சரிதான். இறந்து போன நாகம்மாள் வீடு எங்குள்ளது என்றால் ரோட்டின் தென்புறம் உள்ளது. தென்புறத்திலிருந்து வடபுறம் ரோட்டை கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சத்தம் கேட்டுத்தான் போய்ப்பார்த்தேன் என்றால் சரிதான். எதிரியின் வாகனமான அரசு பேருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தது. சம்பவ இடம் இருட்டான பகுதி என்றால் சரிதான். இறந்து போன நபருக்கு 80 வயதிருக்கும்.

2. எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபர் சாலையை கடக்கும் போது எதிரே வரும் வாகனத்தை கவனிக்காமலும் , வயது முதிர்வின் காரணமாக பார்வைக்குறைபாடு காரணமாக விபத்தை தழுவிக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுத்தவர் அண்ணன் என்பதாலும் இறந்து போனவர் எனது பெரியம்மா என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 10:51:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.